தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள்,
சென்னை–6
ந.க.எண்.056049/டபிள்யு2/இ1/2011 நாள். 28.7.2011

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி – முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை/சிறப்புநிலை பெற அனைத்து கல்விச் சான்றுகளையும் உண்மைத்தன்மை அறிந்த பிறகே வழங்க இயலும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது – உரிய ஆணைகள் வழங்கக் கோருதல் – சார்பாக.

பார்வை: தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழக மாநிலத் தலைவரின் கடிதம் நாள். 29.06.2011

––––

சமீப காலமாக போலி மதிப்பெண் சான்றுகள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டதன் அடிப்படையில் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்கள் சார்பாக, அவர்களின் மதிப்பெண் பட்டியல்களை உண்மைத்தன்மை அறிந்து, பணிவரன்முறை செய்வதற்கான விவரப் படிவத்தில் அதனை குறிப்பிட்டு அனுப்புமாறு தெரிவித்து தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள் ஒ.மு.எண்.13069/டபிள்யு2/இ1/2010, நாள்.18.02.2010ன்படி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது முதுகலையாசிரியர் நிலையில் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை கோரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு கருத்துரு அனுப்பப்படும்போது அனைத்து கல்விச் சான்றுகளையும் உண்மைத்தன்மை அறிந்த பிறகே தேர்வுநிலை/சிறப்புநிலை வழங்க இயலும் எனக் குறிப்பிட்டு பல்வேறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் கருத்துரு திருப்பி அனுப்பப்படுவதாக பார்வையில் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பணிவரன்முறை, தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கும் சமயத்தில் சான்றிதழ்கள் உண்மைத்தன்மை அறிந்து வழங்கியிருப்பின் அவ்வாசிரியர்களுக்கு மீண்டும் சான்றிதழ்கள் உண்மைத் தன்மைக்கு அனுப்ப வேண்டாம் என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– மு.பழனிச்சாமி
இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.